*Thiruvalluvar University, Vellore 632115*
*Department of Tamil*

# *Diploma and Certificate Courses in Manuscriptology*

***Syllabus with effect from the academic year 2020-21***

***Submitted to Registrar for getting approval of Academic Council meet on 17.09.2020***

*Thiruvalluvar University, Vellore 632115, Department of Tamil*
*Diploma and Certificate Courses in Manuscriptology, Programme Structure, 2020-21 onwards*

| Semester | Paper Type | Credits | Hrs of Teaching | Practical Hrs | Seminar, Workshop, etc., | Exam Hrs | Total Marks Maximum | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Internal | External | Total |
| I | Core – 1தமிழ் வரி வடிவ வரலாறும் எழுத்துப்பிரதிகளும் | 4 | 4 | 2 | 1 | 3 | 25 | 75 | 100 |
| | Core – 2 தமிழ்மொழி அமைப்பியல் | 4 | 4 | 2 | 1 | 3 | 25 | 75 | 100 |
| | Core – 3 தமிழ் யாப்பியம் | 4 | 4 | 2 | 1 | 3 | 25 | 75 | 100 |
| | Practical 1 | 3 | 3 | 0 | 0 | 3 | 25 | 75 | 100 |
| | Practical 2 | 3 | 3 | 0 | 0 | 3 | 25 | 75 | 100 |
| | Mini Project | 5 | 1 | 0 | 2 | 3 | 25 | 75 | 100 |
| | | 25 | 19 | 6 | 5 | | 150 | 450 | 600 |
| II | Core – 4 சுவடிப் பதிப்பியல் நெறிகள் | 4 | 4 | 2 | 1 | 3 | 25 | 75 | 100 |
| | Core – 5சுவடிப் பதிப்பியல் வரலாறு | 4 | 4 | 2 | 1 | 3 | 25 | 75 | 100 |
| | Practical – 3 | 4 | 4 | 2 | 1 | 3 | 25 | 75 | 100 |
| | Practical – 4 | 3 | 3 | 0 | 0 | 3 | 25 | 75 | 100 |
| | Project | 5 | 2 | 0 | 4 | 3 | 25 | 75 | 100 |
| | | 20 | 17 | 6 | 7 | | 125 | 375 | 500 |
| | | | | | | | 275 | 825 | 1100 |
| | Grand Total | 45 | | | | 30 hours | 1100 | | 1100 |

**Note:** On completion of Semester I, Certificate Course shall be awarded, On Completion of Semester I and II, Diploma course shall be awarded.

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester I. Core – 1***

## தமிழ் வரிவடிவ வரலாறும் எழுத்துப்பிரதிகளும்

**நோக்கம்**

1. *தமிழ் வரிவடிவங்கள், மரபு ஆவணங்களில் இருப்பதை அறிதல்*
2. *உயிர்மெய் எழுத்தின் வரிவடிவங்களை அறிதல்*
3. *உயிர்மெய் எழுத்துகளின் வரிவடிவங்களை அறிதல்*
4. *கிரந்தம், கூட்டு எழுத்துகளின் வரிவடிவங்களை அறிதல்*
5. *குறிகள், எண்களின் வரிவடிவங்களை அறிதல்*

***அலகு 1 எழுத்துப்பிரதிகளும் கருவிகளும்***

*ஓலை, செப்பேடு, கல்வெட்டு, பானை ஓடு, நாணயம் முதலான எழுதுபொருள்கள், எழுது கருவிகள், பதிப்புக்கருவிகள், தொல்லியலும் பதிப்பியலும், சுவடியியலும் பதிப்பியலும், எழுத்துகள் வேறுபடும் விதங்கள்.*

*பிராமி எழுத்து, வட்டெழுத்து, தமிழி எழுத்து, கோல் எழுத்து முதலான எழுத்து வகைகள்.*

*அரசியல் எல்லைகளும் தமிழ் வரிவடிவப் பயன்பாடுகளும், வரலாற்றுக் காலப் பகுப்புகளும் வரிவடிவங்களின் தொடர்ச்சியும்.*

***அலகு 2 உயிர், மெய் எழுத்துகள்***

*உயிர் எழுத்தின் வரிவடிவங்கள், வரிவடிவ அட்டவணைகள், கால வரிசைப்படி, நில எல்லைப்படி சுவடிகள், தொல்லியல் ஆவணங்களில் எழுத்துகளின் பயன்பாடு, எழுத்துகளின் மாற்று வடிவங்கள்.*

***அலகு 3 உயிர்மெய் எழுத்துகள்***

*உயிர்மெய் எழுத்தின் வரிவடிவங்கள், வரி வடிவ அட்டவணைகள், கால வரிசைப்படி, நில எல்லைப்படி சுவடிகள், தொல்லியல் ஆவணங்களில் எழுத்துகளின் பயன்பாடு, மாற்று வடிவங்கள்.*

***அலகு 4 கிரந்தம், கூட்டு எழுத்துகள்***

*கிரந்த எழுத்துகள்: சுவடிகள், தொல்லியல் ஆவணங்கள், கிரந்த எழுத்துகளின் பயன்பாடு, மாற்று வடிவங்கள், பிறமொழிச் சொற்கள் மற்றும் தமிழ்மொழிச் சொற்களைப் பிரித்து அறிதல். கூட்டு எழுத்துகளைப் பிரித்தல், சேர்த்தல் முறைகள்*

***அலகு 5 குறிகள், எண்கள்***

*குறியீடுகள், குறியீடுகளின் பொருண்மைகள், மாற்று வடிவங்கள், குறியீடுகளின் பயன்பாடு*

*எண்கணிதம்: எண்கள் மேல்கணக்கு, கீழ்க்கணக்கு, மரபு அளவுகள்: நிறை, நீட்டல்*

*எழுத்துகளின் தொடர்ச்சி வெற்றிடம், வரிகளின் நீட்சி. சுவடி வடிவம், தன்மை*

***பாடநூல்***

*மு.கோ.இராமன், 1982, சுவடியியல் பயிற்சி கையேடு, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

*பூ.சுப்பிரமணியம், 2004, சுவடிப் பதிப்புக்கலை வழி காட்டி, டாக்டர் உ.வே.சா., சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.*

*குடவாயில் பாலசுப்பிரமணியன், சுவடியியல் பயிற்சி கையேடு, தஞ்சாவூர்: சரஸ்வதி மகால் நூலகம்.*

*குடவாயில் பாலசுப்பிரமணியன், சுவடியியல் பயிற்சி கையேடு, தஞ்சாவூர்: சரஸ்வதி மகால் நூலகம்.*

*முனைவர் மோ.கோ.கோவைமணி, 2006, எண்ணும் எழுத்தும், தஞ்சாவூர்: பழமொழி பதிப்பகம்.*

***பார்வை நூல்***

*மோ.கோ. கோவைமணி, 1007, இந்திய காலக்கணிதம், தஞ்சாவூர்: பாமொழி பதிப்பகம்.*

*மோ.கோ. கோவைமணி, 2006, சுவடியியல், தஞ்சாவூர்: பாமொழி பதிப்பகம்.*

*ம.சா. அறிவுடைநம்பி, 2006, சுவடியியல் கலைச்சொல் விளக்க அகராதி, புதுச்சேரி: கருமணி பதிப்பகம்.*

*ஜி. ஜான்சாமுவேல், 1994, உதிரும் தமிழ் மலர்கள், சென்னை: ஆசியவியல் நிறுவனம்.*

*ம.சா.அறிவுடைநம்பி & சி.லட்சுமணன், பதிப்பியல் நெறிமுறைகள், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.*

*பா. கண்ணையன், 2008, தமிழ்ச் சுவடிகளில் எண்கணிதம், மயிலம்: பொம்மபுரம் ஆதீன வெளியீடு.*

*பூ.சுப்பிரமணியம், 1991, சுவடியியல், சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.*

*முனைவர் மோ.கோ.கோவைமணி, 2013, ஓலைச்சுவடியியல், தஞ்சாவூர்: பாமொழி பதிப்பகம்.*

*தி.மகாலட்சுமி மற்றும் க.ப.வித்யாதரன், 2009, சுவடியியல் ஆய்வு, சென்னை: ஸ்தபதி பதிப்பகம்.*

***கற்றல் திறன் புலப்பாடு***

*அலகு 1ஐக் கற்றவர்கள் தமிழகத்தின் மரபான எழுது கருவிகளையும், எழுதப் பயன்பட்ட பொருள்களையும் அவற்றிற்கான சூழல்களையும் அறிவார்கள்.*

*அலகு 2ஐக் கற்றவர்கள் சுவடிகளில் பயன்படுத்துப்பட்டுவந்த உயிர், மெய் எழுத்துகளின் வரிவடிவங்களை விளக்குவார்கள்*

*அலகு 3ஐக் கற்றவர்கள் சுவடிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள உயிர்மெய் எழுத்துகளின் வரிவடிவங்களை விளக்குவார்கள்.*

*அலகு 4ஐக் கற்றவர்கள் சுவடிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள கிரந்தம், கூட்டு எழுத்துகளை விளக்குவார்கள்.*

*அலகு 5ஐக் கற்றவர்கள் தமிழ் எழுத்து மரபில் இருந்துவரும் குறியீடுகளை விளக்கு வார்கள்.*

*ஐந்து அலகுகளையும் கற்றவர்கள் சுவடி முதலானவற்றின் மரபான வரிவடிவங்களில் சமகாலக் கருத்துகளை எழுதத் தெரிந்தவர்களாகவும் இருப்பார்கள்.*

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester I. Core – 2***

## **தமிழ்மொழி அமைப்பியல்**

**நோக்கம்**

1. **ஒலி, வரி வடிவம் என்ற இரு நிலைகளிலும் தமிழின் ஒலியன்களை அறிவது**
2. **தமிழ்ப் பெயர்ச் சொற்களை, அதன் வகைகளை, செயல்பாடுகளை அறிவது**
3. **தமிழ் வினைச்சொற்கள், அதன் வகைகளை, செயல்பாடுகளை அறிவது**
4. **தமிழின் தொடர், வாக்கியம் மற்றும் அவற்றின் வகைகளை அறிவது**
5. **புணர்ச்சி விதிகளை அறிவது**

**அலகு *1* ஒலியனியல்**

*இந்திய மொழிகள்: நான்கு வெவ்வேறு மொழிக் குடும்பங்கள், இந்தோ ஆரிய மொழிகள், திராவிட மொழிகள், திருந்திய மொழிகள், திருந்தா மொழிகள், திராவிட மொழிகளில் இலக்கியங்கள், இக்காலத் தமிழ், ஒலி வகைப்பாடு, ஒலியுறுப்புக்கள், வாயொலிகளும் மூக்கு ஒலிகளும், ஒலிப்புடை ஒலிகள் (Voiced), ஒலிப்பில்லா ஒலிகள், உயிர் ஒலிகள், மெய் ஒலிகள், உயிர் ஒலிகள் பிறப்பும் வகையும், குறிலும் நெடிலும், மெய்யொலிகள், உயிர் ஒலியன்களும் மாற்றொலிகளும், மெய்யொலியன்களின் மாற்றொலிகள், ஒலியன்களின் வருகைமுறை, ஆய்தம், மெய்யொலியன்கள் வரும் இடங்கள், மெய்ம் மயக்கங்கள், பதினெட்டு மெய்களும் அவற்றுடன் வரும், வராத மெய்களும், உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம், மூன்று மெய்ம்மயக்கங்கள், மொழிக்கு முதலில் மெய்ம்மயக்கங்கள், இறுதியில் மெய்ம் மயக்கங்கள், மொழியசையும் யாப்பு அசையும், கிரந்த எழுத்துக்கள்.*

**அலகு *2* சொல்லியல்: பெயரியல்**

*சொல் வகைப்பாடு, பெயர்ச்சொல், பெயர்ச்சொல் வகைப்பாடு, எண்ணுப்பெயர்கள், திணை எண் பால் பகுப்பு, பதிலிடு பெயர்கள், மூவிடப் பெயர்கள், வினாப் பதிலிடு பெயர், வரையறையில்லாப் பதிலிடு பெயர், முழுமைப் பதிலிடு பெயர், எதிர்மறை முழுமைப் பதிலிடு பெயர், உடைமைப் பதிலிடு பெயர், தற்சுட்டுப் பதிலிடு பெயர், ஆகுபெயர், எழுவாய் பயனிலை இயைபு, தொகை: தொகாநிலையும் தொகுநிலையும், வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை, வேற்றுமை: அடிப்படைப் பொருள் தொடர்பு காட்டுவது, எழுவாய் வேற்றுமை, செயப்படுபொருள் வேற்றுமை, கருவி வேற்றுமை, பொருள் வேற்றுமை, காரண வேற்றுமை, உடனிகழ்ச்சி வேற்றுமை, குறி வேற்றுமை அல்லது கொடை வேற்றுமை, நோக்க வேற்றுமை, நீங்கல் வேற்றுமை, உடைமை வேற்றுமை, இட- கால வேற்றுமை, காலப்பொருள், விளிவேற்றுமை, சாரியை, வேற்றுமை மயக்கம், உருபில் மயக்கம், பொருள் மயக்கம், தொடரியல் மயக்கம், பெயரடை: பெயரடைகளின் பண்புகள், தனிப்பெயரடை, ஆக்கப்பெயரடை அல்லது கூட்டுப் பெயரடை, வினைப்பெயரடைகள், எதிர்மறை அடைகள்.*

**அலகு *3* வினையியல்: வினை வகைப்பாடு**

*வினைச்சொல், வினைப்பெயர்கள், வினைச்சொல் அமைப்பு, வினை வகைப்பாடு, தனிவினை, கூட்டுவினை, தெரிநிலை வினையும், குறிப்பு வினையும், குறைவினை, செயப்படுபொருள் குன்றா வினையும் குன்றிய வினையும், செய்வினையும் செயப்பாட்டு வினையும், தன்வினையும் பிறவினையும், காரணவினை, மெல்வினை, வல்வினை, இடைவினை, காலமும் எதிர்மறையும்: கால இடை நிலைகளும் நேரக் கிளவியும், தமிழில் காலங்கள், இறந்தகால உருபுகள் அல்லது இடைநிலைகள், நிகழ்காலம், எதிர்காலம், எதிர்மறை காட்டும் உருபுகள், சொற்கள், எச்சவினை:*

*எச்ச வகைப்பாடு: வினையெச்சம், எச்சங்களும் காலமும், செயவென் எச்சம், செய்தென் எச்சம், நிபந்தனைகள், நிபந்தனை எச்சம், விட்டுக்கொடுப்பு எச்சம், பெயரெச்சம், வினையடை, செய்து என்னும் வினையெச்சம், செயவென் வினையெச்சம், என்று என, ஆக ஆய், இட வினையடை, நேர வினையடை, வினைப்பெயர்கள்: ஆக்கப்பெயர்கள், தொழில் பெயர்கள், காலம் காட்டாத தொழில் பெயர்கள், காலத் தொழில் பெயர்கள், வினையாலணையும் பெயர்கள், குறிப்பு வினையாலணையும் பெயர்கள், துணை வினை, செய்தென் எச்சத்துடன் வருவன, செயவென் எச்சத்துடன் வருவன, செயல் வாய்ப்பாட்டுத் தொழில் பெயருடன், துணை வினைகளும் முதல் வினைகளும், துணை வினையின் பண்புகள், துணைவினை வகைப்பாடு, வினைமுற்று: ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்றுக்கள்*

***அலகு 4 தொடரியல்***

*இடைச்சொல்: இடைச்சொற்கள், இடைச்சொல் வகைப்பாடு, பெயர்களுடன், வினைகளுடன், இணைப்பு உருபுகளாக உம், கூட, ஏ, தான், ஆவது, ஓ, மட்டும் மாத்திரம், எல்லாம், தனி வாக்கியம், வாக்கிய உறுப்புக்கள், பெயர்த்தொடர், வினைத்தொடர், வாக்கிய வகைகள், அடிப்படை வாக்கிய வகைகள், வினைப்பயனிலை வாக்கியம், தனிவாக்கியம், கலவை வாக்கியம், கூட்டு வாக்கியம், இடமாற்றங்களும் பிறமாற்றங்களும், புதைநிலையும் புறநிலையும், செய்வினை செயப்பாட்டு வினை வாக்கியங்கள், எழுவாய் பயனிலை இயைபு, கலவை வாக்கியம்: புதை நிலை, புறநிலை, பல்வேறு விதமான கால வினையெச்சத் தொடர்கொண்ட வாக்கியங்கள், பல்வேறு வேற்றுமைத் தொடர்பு வாக்கியங்கள், வினையெச்ச வாக்கியங்கள், பெயரெச்ச வாக்கியங்கள், கூட்டு வாக்கியம்: கூட்டுப்பெயர்த் தொடர்கள், கூட்டு வாக்கியங்கள் வகைப்பாடு, முழுநிலை இணைப்பு, பயனிலை இணைப்பு, வினையடை, வினையெச்சங்கள், இணைப்பு வாக்கியம், இணைப்பு உருபு, தொடர்பு உடைய இரண்டு வாக்கியங்கள்.*

***அலகு 5 புணரியல்***

*புணர்ச்சி அல்லது சந்தி, நிலைமொழி வருமொழி, வேர்ச்சொல்லும் அடிச்சொல்லும், புணர்ச்சி வகைப்பாடுகள், அகப்புணர்ச்சி புறப்புணர்ச்சி, இயல்புப் புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி, வகைகள், தோன்றல், திரிதல், கெடுதல், உயிரீற்றுப் புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி, குற்றியலுகரப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும், வேற்றுமைப் புணர்ச்சி, உருபுப் புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி, தொகாநிலைத் தொடரும் தொகுநிலைத் தொடரும், அல்வழிப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சியின் வகைகள்.*

***பாட நூல்***

*ச. அகத்தியலிங்கம், 2002, தமிழ் மொழி அமைப்பியல், சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம்*

***பார்வை நூல்***

*கு. பரமசிவம், 2017, இக்காலத் தமிழ் மரபு, புத்தா நத்தம்: அடையாளம்*

*கு. பரமசிவம், 2017, இக்கால மொழியியல், புத்தா நத்தம்: அடயாளம்*

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester I. Core – 3***

## ***தமிழ் யாப்பியல்***

***நோக்கம்***

1. ***செய்யுளின் உறுப்பாக வரத்தக்க மொழிக் கூறுகளை அறிதல்***
2. ***செய்யுளின் வகை, பாவகைகளை அறிதல்***
3. ***செய்யுளின் வகை, பாவினங்களை அறிதல்***
4. ***செய்யுள் மொழியை அறிதல்***
5. ***செய்யுளின் பொருண்மை கொள்ளும் முறைகளை அறிதல்***

***அலகு 1 செய்யுள் உறுப்புகள்***

*எழுத்து வகை: குறில், நெடில், உயிர், மெய், உயிர்மெய், குறுக்கங்கள், அளபெடைகள், சார்பெழுத்து, சொல் இலக்கணத்திலும் யாப்பு இலக்கணத்திலும் எழுத்து இலக்கணம், எழுத்துகளுக்கும் செய்யுளின் இசை அமைப்பிற்கும் இடையில் உள்ள உறவுகள்.*

*அசை வகை: இயலசை, உரியசை, நேரசை, நிரையசை, நேர்பு, நிரைபு*

*சீர் வகை: ஓரசை, ஈரசை, மூவசை, நாலசைச் சீர்கள், எழுத்து, சொல்லிலிருந்து சீராக்க முறைகள்.*

*தளைவகை: வெண்டளை, ஆசிரியத்தளை, கலித்தளை, வஞ்சித்தளை, ஏழுவகைத் தளைகள், தூக்கு, ஓசை*

*அடிவகை: குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி இவை பாவகை, பாவினங்களுடன் கொள்ளும் உறவுகள். ஈற்றடி, எருத்தடி, அடிகளின் எண்ணிக்கையும் யாப்பும்*

*பாவகைகள், பாவினங்கள்:*

*தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் (கூடுதல்): மரபு, யாப்பு, நோக்கு, திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம், தூக்கு தொடை, ஒப்பீடு: யாப்பருங்கலக்காரிகை அடிப்படை யாப்பியல் மரபுகளும் தொல்காப்பிய மரபும்.*

***அலகு 2 பாவியல்***

*வெண்பா: குறள், சிந்தியல், அளவியல், பஃறொடை வெண்பாக்கள், சலவை வெண்பா.*

*ஆசிரியப்பா: நேரிசை, நிலைமண்டிலம், அடிமறி மண்டிலம், இணைக்குறள் ஆசிரியப்பாக்கள்*

*கலிப்பா: ஒத்தாழிசை, வெள்ளை, கொச்சகக் கலிப்பாக்கள், உறழ் கலிப்பா, கொச்சக ஒரு போகு*

*வஞ்சிப்பா: குறளடி, சிந்தடி வஞ்சிப்பாக்கள்*

*நூற்பா, மருட்பா, மேல்வைப்பு, பரிபாடல்*

*இசைப்பாக்கள்: கும்மி, சிந்து, களிப்பு, கண்ணி, தெம்மாங்கு, வண்ணம், கீர்த்தனை, அம்மானை, ஊசல், பந்து, வரி, தாண்டகம், அன்னபிற*

*மதுரம், வித்தாரம், ஆசு, சித்திரக்கவிகள்*

*சித்திரக் கவி வகைகள்: மாலைமாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம், எழு கூற்றிருக்கை, காதை சுரப்பு, கரந்துறைபாட்டு, கூட சதுர்க்கம், கோமூத்திரி, விசித்திரப்பா, வினாவுத்தரம், சருப்பதோ பத்திரம், நாகபந்தம், வருத்தனம், பதும பந்தம், முரசு பந்தம், இரத பந்தம், பிற*

***அலகு 3 பாவினங்கள்***

*வெண்பா: வெண்டாழிசை, வெள்ளொத்தாழிசை, வெண்டுறை, வெளி விருத்தம், நிலைமண்டிலம், அடிமாறி மண்டிலம்.*

*ஆசிரியப்பா: ஆசிரியத்தாழிசை, ஆசிரிய ஒத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய நேர்த்துறை, ஆசிரிய இணைக்குறள் துறை, ஆசிரிய விருத்தம், அடிமறி மண்டிலம், நிலைமறி மண்டிலம்.*

*கலிப்பா: கலித்தாழிசை, கலி ஒத்தாழிசை. கலித்துறை: கலி மண்டிலம், கலிநிலை. கலி விருத்தம்: கலிநிலை விருத்தம், கலி மண்டில விருத்தம்.*

*வஞ்சிப்பா: வஞ்சித்தாழிசை: வஞ்சிநிலை, வஞ்சி மண்டிலம்.வஞ்சித்துறை: வஞ்சிநிலை, வஞ்சி மண்டிலம். வஞ்சி விருத்தம்: வஞ்சிநிலை, வஞ்சி மண்டிலம்.*

*வெண் செந்துறை, குறள் தாழிசை, திருஇருக்கக்குறள், கட்டளைக் கலித்துறை, காப்பியக் கலித்துறை.*

***அலகு 4 செய்யுள்மொழி***

*எழுத்து, சொல், தொடர், வாக்கியம், கூற்று, உரையாடல் முதலானவற்றுக்கு அசை, சீர், தளை, அடி, செய்யுள் முதலானவற்றுடன் உள்ள உறவு, அசைநிலை.*

*செய்யுள் விகாரங்கள் (6), சொற்குறைகள் (3), புணர்ச்சித் திரிபுகள், சந்திப் பிரிப்பு முறைகள், வகையுளி, பிணை, புணர்ச்சி வகைகள்.*

*செய்யுளின் கருத்தும் சொல் தேர்வும், எழுத்து, அசை, சீர், அடி முதலானவற்றை விரிக்கும் மற்றும் குறைக்கும் முறைகள், தொடையாக்கம், யாப்பிலக்கணமும் பாட, சுவடிபேதங்களும் மொழி அமைப்புடன் அவற்றுக்குள்ள உறவுகளும்.*

*செய்யுள் வகைகள்: தொடர்நிலை, தொகைநிலை, முத்தகம், குளகச் செய்யுள்கள், வைதர்ப்ப நெறி, கௌட நெறி, வண்ணம் (20), வனப்பு (8).*

*மொழிபுணரியல்புகள்: யாற்று நீர், மொழிமாற்று, நிரல்நிறை, அடிமறி, சுண்ணம், தாப்பிசை, பூட்டுவில், கொண்டுகூட்டு, அளைமறி பாப்புப் பொருள்கோள்கள்*

***அலகு 5 பொருள்கோளும் அணிகளும்***

*செய்யுளை உரைநடை வடிவிறகு மாற்றுதல், உரைப்பணிம் பதிப்புப்பணியும், தமிழ்மொழியின் நிறுத்தல் குறியீடுகள், சொற்பிரிப்பு முறைகள், செய்யுளின் வாக்கியம், தொடர் முதலானவற்றைப் பகுத்து அறிதல். நேரடிப்பொருள், மறைமுகப்பொருள்கோள் முறைகள், மொழிக்கும் பொருண்மைக்கும் இடையில் உள்ள உறவுகளைத் தீர்மானித்தல்.*

*அணி வகைகள்: ஒப்புமை அடிப்படையிலான பொருண்மைகள், காரணம் – காரியம் – விளைவு அடிப்படையிலான பொருண்மைகள், எதிர்பொருண்மை அடிப்படையிலான பொருண்மைகள், தொகுதி – பகுதி, முதல் – சினை, குழு – உறுப்பு முதலான உறவுகள் அடிப்படையிலான பொருண்மைகள்.*

***பாடநூல்கள்***


1. *அரங்கராசன் மருதூர், 2005, யாப்பறிந்து பாப்புனைய, சென்னை :ஐந்திணைப் பதிப்பகம்.*

2. கோபலையர் தி.வே. 2005. தமிழ் இலக்கணப் பேரகராதி: பொருள்: யாப்பு 1&2, சென்னை: தமிழ் மண் பதிப்பகம்

**பார்வை நூல்கள்**

3. பசுபதி, 2010, கவிதை இயற்றிக்கலக்கு, சென்னை: எல்.கே.எம். பப்ளிகேஷன்.
4. அரங்கராசன் ச, 1989, பொருள்கோள், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
5. சண்முகதாஸ் அ, 1998, தமிழின்பா வடிவங்கள், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
6. மணிகண்டன் ய, 2016, தமிழில் யாப்பிலக்கணம், வரலாறும் வளர்ச்சியும், நாகர்கோவில்: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் பி லிட்.
7. மணிகண்டன் ய., 2005, சி. வை.தாமோதரம் பிள்ளை இயற்றிய கட்டளைக் கலித்துறை, சென்னை: விழிகள் பதிப்பகம்.
8. சிவமணி எஸ், 2008, சித்திரவண்ணக் கவிகள், சென்னை: சிவா பதிப்பகம்.
9. முத்துசாமி க, 2016, உங்கள் தமிழ் இலக்கணம் – யாப்பு, தஞ்சாவூர், அகரம்
10. சுப்பிரமணியன் ச.வே, 2010, இலக்கணத் தொகை: யாப்பு – பாட்டியல், சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
11. *Manikandan Y. (Editor), 2014, Early Studies in Tamil Prosody – The Evolution of Tamil Viruttams by E.N. Thanikachala Mudaliar, Chennai: Indian University Press.*
12. *Subramanyan S., The Commonness in the Metre of the Dravidian Languages, Thiruvananthapuram: Dravidian Linguistics Association.*

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester I. Practical-1***

**செய்முறை:**

1. ஏற்கனவே பதிப்பிக்கப்பட்ட நூலை எடுத்துக்கொண்டு அந்த நூலில் உள்ள வரிவடிவங்களை, பதிப்பிக்க மூலமாக இருந்த சுவடியின் வரிவடிவங்களுடன் ஒப்பிட்டு ஆராயவேண்டும்.
2. அச்சிடப்பட்ட நூலின் வரிவடிவிற்கும் ஓலைச்சுவடியின் வரிவடிவங்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை ஒவ்வொரு எழுத்தாக ஆராய்ந்து தரவுகள் தொகுக்கவேண்டும்.
3. தாள்-1இல் குறிப்பிட்டுள்ளபடி ஐந்து அலகுகளுக்கும் ஐந்து இயல்களாக்கி அறிக்கையை மாணவர் சமர்ப்பிக்கவேண்டும்.

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester I. Practical-2***

**செய்முறை:**

1. ஏற்கனவே பதிப்பிக்கப்பட்ட ஓலைச் சுவடியை எடுத்துக்கொண்டு அந்தச் சுவடியில் உள்ள வரிவடிவங்களை தாள்-1இல் குறிப்பிட்டுள்ளபடி நவீனத் தமிழ் வரிவடிவங்களாக மாற்றி ஒவ்வொரு எழுத்துக்கும் தனித்தனியே அடைவுகள் தயாரிக்கவேண்டும்.
2. அடைவுகள் தயாரித்த பிறகு ஏற்கனவே பதிப்பிக்கப்பட்ட நூலை எடுத்துக்கொண்டு ஆய்வில் மாணவர் கண்டடைந்த வரி வடிவிற்கும் ஏற்கனவே பதிப்பிக்கப்பட்ட நூலின் வரிவடிவங்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விளக்கவேண்டும்.
3. மாணவர் தன் செய்முறையில் ஏற்பட்ட பிழைகளைத் தொகுத்து, வகைப்படுத்தி விளக்கவேண்டும்.
4. தாள்-1இல் குறிப்பிட்டுள்ளபடி ஐந்து இயல்களாக்கி அறிக்கையை மாணவர் சமர்ப்பிக்கவேண்டும்.

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester I. Project-1***

*ஆய்வுத் திட்டம்:*

1. *பதிப்பிக்கப்படாத ஒரு சுவடியை எடுத்துக்கொண்டு அதை மாணவர் நவீனத் தமிழின் வரிவடிவங்களுக்கு மாற்றி எழுதி, கணனியில் பதிவு செய்து, ஆய்வு அறிக்கையுடன் அதைச் சமர்ப்பிக்கவேண்டும்.*
2. *பதிப்பிக்கப்பட்ட சுவடி ஆய்வு அறிக்கையில் பின்னிணைப்பு-2இல் தரப்படவேண்டும்.*
3. *ஆய்வு அறிக்கையின் இயல்கள் ஆய்வாளர் பதிப்பு அனுபவங்களையும் பதிப்பிக்கப் பின்பற்றிய நெறிமுறைகளையும் பற்றியதாக இருக்கவேண்டும்.*
4. *தாள்-1இல் குறிப்பிட்டபடி ஐந்து வகையான வரிவடிவ அடைவுகள் தயாரித்து மாணவர் பின்னிணைப்பு-1இல் தரவேண்டும். வரிவடிங்களின் முதன்மை வடிவம், மாற்று வடிவம், திரிபு வடிவம் முதலானவற்றின் அடைவுகள் இந்த அட்டவணைகளில் தரப்படவேண்டும்.*
5. *ஆய்வுத் திட்டம் பதிப்பியல் வல்லுநர் ஒருவராலும் சுவடியின் உள்ளடக்கத்திற்குப் பொருத்தமான ஒரு அறிஞராலும் மதிப்பீடு செய்யப்படவேண்டும்.*

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester II. Core – 4***

**சுவடிப் பதிப்பியல் நெறிகள்**

**நோக்கம்**

1. *சுவடிமொழி வரிவடிவைச் சமகால வரிவடிவ மொழிக்கு மாற்றுதல்*
2. *சுவடியில் உள்ள நூலைச் செம்பதிப்பாகத் தருதல்*
3. *சுவடியின் பரம்பரை வரலாற்றை அறிதல்*
4. *பதிப்பிக்கப்பட்ட நூலின் உள்ளடக்க விவரங்கள் தருதல்*
5. *கணினி வழிப் பதிப்பியல் நெறிகளைப் பழகுதல்*

***அலகு 1 எழுத்துப்பெயர்ப்பும் மொழி அமைப்பும்***

*சுவடிகளின் வரிவடிவங்கள், எழுத்துகளின் தனி வடிவங்கள் மற்றும் சேர்க்கை வடிவங்கள், எழுத்துப்பிரிப்பு முறைகள், மாற்று வரிவடிவங்கள், சுவடிக்குறியீடுகள், சுவடிகளில் எண்கள் – இவைகளை நினைவு கூர்தல்.*

*நகல்கள் தயாரித்தல்: கணினி ஒளிப்பட நகல், சுவடியின் நகலக நகல்கள் எடுத்தல், படி எடுத்து எழுதுதல், வரிவடிங்களைத் தீர்மானித்தல், மொழி: எழுத்து, சொல், தொடர். வாக்கியங்களைத் தீர்மானித்தல்.*

*யாப்பு: எழுத்து, அசை, சீர், அடி, செய்யுள் முதலான வடிவங்களை தீர்மானித்தல், சொற்பிரிப்பு மற்றும் சேர்க்கை முறைகளை மொழி, யாப்பு என்ற இருமுறைகளிலும் செய்தல்.*

***அலகு 2 மூலபாட ஆய்வியல்***

*சரியான சொல், தொடர், வாக்கியம் மற்றும் அசை, சீர், அடிகளைத் தீர்மானித்தல், பல மூலப் பிரதிகள் இருந்தால் திரட்டுதல், முன்பே அச்சான பிரதிகள் இருந்தால் எடுத்துக்கொள்ளுதல், செம்பதிப்பை உருவாக்குதல், பாடவேறுபாடுகளைக் குறித்தல், ஒத்த தொடர்களைக் குறித்தல், மீட்டுருவாக்கம் செய்ய உள்ள வாய்ப்புகளைக் குறிப்பிடுதல், தொடர்ந்து செய்யும் பணியில் பதிப்புப் பிழைகளைத் திருத்தி வருதல், அடிக்குறிப்பிடுதல்.*

***அலகு 3 சுவடியின் வரலாறு அறிதல்***

*பதிப்பிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட சுவடியின் இருப்பிடம், உடைமையாளர், சுவடியின் மரபு வழிகளைக் காலம் வாரியாக அறிதல், இடம் வாரியாக அறிதல், சுவடி பெயர்த்தெழுதப்பட்ட வழிமுறைகளை அறிதல், மதிப்பிடுதல், சுவடி சேகரிக்கப்பட்ட முறை, பாதுகாக்கப்பட்டிருக்கிற முறைகளை விளக்குதல், சுவடியின் ஆசிரியர், படி எடுத்தோர், பாதுகாத்தோர் வரலாறுகளை அறிதல்.*

***அலகு 4 உள்ளடக்க ஆய்வுகள்***

*சொல்லடைவுகள், பொருளடைவுகள், அகராதிகள், பாடல் முதற்குறிப்புகள், விளக்கக்குறிப்புகள் முதலானவற்றைத் தருதல், நவீன நூல் வடிவங்களாக்குதல்: அச்சு வடிவம், கணனி வடிவம். நூல் உள்ளடக்கம் குறித்த ஆய்வுரை எழுதுதல், பதிப்பித்த நெறிமுறை குறித்த ஆய்வுரை தருதல். பதிப்பியல் அனுபவம், தவறுகளைத் தொகுத்துச் சுய மதிப்பீடு தருதல்*

***அலகு 5 கணினிப் பதிப்பியல்***

*கணினித் தமிழ் எழுத்துருக்கள், எழுத்துருக்களின் பட்டியல், வகைகள், கணினித் தமிழ் விசைப்பலகைகள், தமிழ் மென்பொருள்கள், பதிப்பியல் மென்பொருள்கள், அவற்றைக் கற்கும் முறைகள்.*

*நூல் பதிப்புகள், நூல் பதிப்பு நிறுவனங்கள், நிதி உதவி செய்யும் நிறுவனங்கள், விற்பனை அளவு, வரவு-செலவுத் திட்டங்கள், சுவடி நூல் அச்சிடல்.*

*மின் பதிப்புகள், மின் பதிப்பு அமைப்புகள், நிறுவனங்கள், மின் பதிப்புக்கான செலவினங்கள், சுவடி நூல்களை இணையத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் வெளியிடல்.*

*தமிழைக் கணினியில் பயன்படுத்துவதைக் கற்றல்.*

***பாடநூல்***

*தி.மகாலட்சுமி மற்றும் க.ப.வித்யாதரன், 2009, சுவடியியல் ஆய்வு, சென்னை: ஸ்தபதி பதிப்பகம்.*

*வே. இரா.மாதவன், 2000, சுவடிப்பதிப்பியல், தஞ்சாவூர்: பாவை வெளியீட்டகம்.*

*முனைவர் த.கோ. பரமசிவம் (பதிப்பு), சுவடிப்பதிப்பு நெறிமுறை, தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.*

*பூ. சுப்பிரமணியன், 1991, சுவடியியல், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

*மு. சதாசிவம், 1991, பதிப்பு நெறிமுறைகள், தஞ்சாவூர்: சரஸ்வதி மகால் நூலகம்.*

*அ. விநாயகமூர்த்தி, 1978, மூலபாட ஆய்வியல், மதுரை: பாலமுருகன் பதிப்பகம்.*

*அன்னிதாமசு, 1997, பதிப்பியல், சென்னை: அமுத நிலையம்.*

***கற்றல் புலப்பாட்டுத் திறன்***

1. *அலகு 1ஐக் கற்றவர்கள் சுவடி வரிவடிவைச் சமகாலத் தமிழ் மொழியின் வரிவடிவிற்கும் செய்யுள் வடிவங்களுக்கும் மாற்றுவார்கள்*
2. *அலகு 2ஐக் கற்றவர்கள் செம்பதிப்புகளை உருவாக்குவார்கள்.*
3. *அலகு 3ஐக் கற்றவர்கள் சுவடிகளின் மரபு வழிகளை எழுதுவார்கள்.*
4. *அலகு 4ஐக் கற்றவர்கள் பதிப்பிக்கப்பட்ட நூலினை அடிப்படை நூலாக்குவார்கள், பார்வை நூலாக்குவார்கள் (reference book).*
5. *அலகு 5ஐக் கற்றவர்கள் பதிப்பிக்கப்பட்ட நூலினைக் கணினி மென்நகல் வடிவிற்கு மாற்றுவார்கள்.*

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester II. Core 5***

**சுவடிப் பதிப்பியல் வரலாறு**

**நோக்கம்**

1. தமிழ்க் கல்விச்சூழலின் வரலாறும் சுவடிப் பயன்பாடும் அறிதல்
2. நூல் வகைமை நோக்கில் சுவடிப்பதிப்பு வரலாற்றை அறிதல்
3. சுவடிப்பதிப்பு ஆளுமைகளின் வரலாற்றை அறிதல்
4. சுவடிப்பதிப்பு அமைப்புகளின் வரலாற்றை அறிதல்
5. சுவடிப்பதிப்பை அச்சுத்தொழிலுடன் தொடர்புபடுத்தல்

**அலகு *1* அச்சும் பதிப்பும்**

*ஐரோப்பியர் வருகையும் அச்சுத் தொழிலும், கல்வி, சமயம், அரசியல், மருத்துவக் காரணங்கள் முதலானவற்றின் வழிப்பதிப்புகள், விற்பனை அளவும் வணிக நோக்கும், கல்வி வளர்ச்சியும் நூல்களின் தேவையும், கல்வி நிறுவனங்கள், மக்களின் படிக்கும் வழக்கம், பதிப்பு வகைகள். நூல் வகைகள்.*

**அலகு *2* தமிழ்க்கல்வியும் சுவடிகளும்**

*தமிழ்க்கல்வி: மொழி அல்லாத கல்வியும் மொழிக் கல்வியும், மொழிப்பதிவுகளின் வரலாறு, மொழிப்பதிவுகளைச் சேகரித்தலின் வரலாறு, ஆவணங்களின் பாதுகாப்பு கருவிகள், மருந்துகள், சூழல்கள், அவற்றைப் பாதுகாத்தலின் வரலாறு, பதிப்பும் மீள் பதிப்பும், செம்பதிப்புகளின் வரலாறு.*

*சுவடி தயாரிக்கும் முறைகள், பக்குவப்படுத்தும் முறைகள், சுவடிகளின் நீளம், அகலம், காலம் முதலான பண்புகள், சுவடி வகை, எழுதுபொருள்களின் பண்புகள், எழுதும் முறைகள்.*

**அலகு *3* நூல் வகைமைகள்**

*பதிப்பிக்கப்பட்ட ஆவணங்கள், வரலாறு, பதிப்பு முயற்சிகள் வரலாறு, இலக்கணப் பதிப்புகள், இலக்கியப் பதிப்புகள், உரைப் பதிப்புகள், மூலப்பதிப்புகள், மருத்துவம், சோதிடம், கணிதம், சாத்திரங்கள், சமயம் முதலான பொருண்மைகளில் பதிப்புகளின் வரலாறு. கலைகளும் பதிப்புகளும்*

*(பயிற்சிகட்டுரை: ஏதேனும் ஒரு பதிப்பை எடுத்து, உரிய சுவடியுடன் ஒப்பிட்டு மீள்பார்வை செய்யவேண்டும்.)*

**அலகு *4* சுவடிப்பதிப்பியல் ஆளுமைகள்**

*உ.வே.சா, வையாபுரிப்பிள்ளை, மறைமலையடிகள், ரா.பி.சேதுப்பிள்ளை, தி.வே.கோபாலையர், அடிகளாசிரியர், ஆறுமுக நாவலர், சி.வை.தா., கணபதிப்பிள்ளை, அம்பலவாண நாவலர், கதிரைவேற்பிள்ளை, கனகசபை, பூலோகலிங்கம், மற்றும் பலர்*

*(பயிற்சிக்கட்டுரை: ஏதேனும் சுவடிப் பதிப்பாசிரியரை எடுத்துக்கொண்டு அவரது பதிப்பியல் பணிகளை மீள்பார்வை செய்யவேண்டும்.)*

**அலகு *5* பதிப்பியல் நிறுவனங்கள், அமைப்புகள்**

*உ.வே.சா நூலகம், ஆசியவியல் நிறுவனம், கீழ்த்திசைச்சுவடி நூலகம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தமிழ் இணையக் கல்விக் கழகம், சரபோஜி நூலகம், சைவ மடங்கள், கேரளப்பல்கலைக்கழக சுவடியியல் துறை, பிரெஞ்சு இந்திய நிறுவனம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முதலான நிறுவனங்கள். பிற அயல்நாடுகளில், பிற அயல் மாநிலங்களில் உள்ள நிறுவனங்கள், தமிழ் மரபு அறக்கட்டளை*

*சுவடி அட்டவணை தயாரித்தல், நூலகங்களில் சுவடிப் பயன்பாட்டு நிலைகள், ஒளிப்படம் எடுக்கும் நவீன வசதிகள்*

***பாடநூல்***

*இரா.இளங்குமரன், 2001, சுவடிப்பதிப்பியல் வரலாறு, சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.*

*மோ.கோ.கோவைமணி, 2010, பருவ இதழ் சுவடிப்பதிப்பு வரலாறு, தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.*

*மா.சு.சம்பந்தன், 1980, அச்சும் பதிப்பும், சென்னை: தமிழர் பதிப்பகம்.*

*ம.சா.அறிவுடைநம்பி & இலட்சுமணன், 2003, சுவடிப் பதிப்பாசிரியர்கள், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.*

*ப.பெருமாள், 2012, சுவடிப்பாதுகாப்பு வரலாறு, காரைக்குடி: கோவிலூர் மடாலய வெளியீடு, கோவிலூர்.*

*ஓ.பி. அகர்வால், 1997, கலைப் படைப்புகளையும் நூலகப் பொருட்களையும் பராமரித்தல், புதுதில்லி: நேஷ்னல் புக் டிரஸ்ட்.*

***பார்வை நூல்***

*மு.வை.அரவிந்தன், 1999, உரையாசிரியர்கள், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.*

*உ.வே.சாமிநாதையர், 1990, என் சரித்திரம், சென்னை: உ.வே.சா.நூலக வெளியீடு.*

*1999, கோயில் அரும்பொருள்கள் பாதுகாப்பு, தஞ்சாவூர்: சரஸ்வதிமகால் நூலகம்.*

*ப.பெருமாள், 2012, நூல் பயன்பாடும் பாதுகாப்பும், சென்னை: பாரதி புத்தகாலயம்.*

*V.Jayaraj, 1999, Care of Archival Materials, Thanjavur: Saraswathy Mahal Library.*

*O.P.Agarwal, 1997, Conservation of Book, Manuscripts and Paper Documents, Lucknow, INTACH.*

**புலத்திறன்கள் வெளிப்பாடு**

1. *அலகு 1ஐக் கற்றவர்கள் தமிழ்க் கல்வியின் வரலாற்றை எழுத்து மரபுடன் பொருத்தி விளக்குவார்கள்.*
2. *அலகு 2ஐக் கற்றவர்கள் நூல் வகைமை நோக்கில் சுவடிப்பதிப்பு வரலாற்றை விளக்குவார்கள்.*
3. *அலகு 3ஐக் கற்றவர்கள் ஆளுமை நோக்கில் சுவடிப்பதிப்பு வரலாற்றை விளக்குவார்கள்.*
4. *அலகு 4ஐக் கற்றவர்கள் குழுச் செயல்பாடுகளின், நிறுவன நோக்கில் சுவடிப்பதிப்பு வரலாற்றை விளக்குவார்கள்.*
5. *அலகு 5ஐக் கற்றவர்கள் அச்சுத்தொழில் நுட்பத்துடன் சுவடிப்பதிப்பு வரலாற்றை விளக்குவார்கள்.*

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester II. Practical – 3***

***செய்முறை:***

1. *ஏற்கனவே பதிப்பிக்கப்பட்ட ஓலைச் சுவடியை எடுத்துக்கொண்டு அந்தச் சுவடியில் உள்ள வரிவடிவங்களை தாள்-1இல் குறிப்பிட்டுள்ளபடி நவீனத் தமிழ் வரிவடிவங்களாக மாற்றி ஒவ்வொரு எழுத்துக்கும் தனித்தனியே அடைவுகள் தயாரிக்கவேண்டும்.*
2. *அடைவுகள் தயாரித்த பிறகு ஏற்கனவே பதிப்பிக்கப்பட்ட நூலை எடுத்துக்கொண்டு ஆய்வில் மாணவர் கண்டடைந்த வரி வடிவிற்கும் ஏற்கனவே பதிப்பிக்கப்பட்ட நூலின் வரிவடிவங்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விளக்கவேண்டும்.*
3. *மொழியியல், யாப்பியல் என்ற இருநோக்குகளில் சுவடியின் வரிவடிவ மொழியையும் மாணவர் செய்முறையில் பதிப்பித்த நூலின் வரிவ மொழியையும் ஒப்பிட்டு விளக்கவேண்டும்.*
4. *மாணவர் தன் செய்முறையில் ஏற்பட்ட பிழைகளைத் தொகுத்து, வகைப்படுத்தி விளக்கவேண்டும்.*
5. *6000 செறிவான சொற்களில் அறிக்கையை மாணவர் சமர்ப்பிக்கவேண்டும்.*

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester II. Practical – 4***

***செய்முறை:***

1. *பதிப்பிக்கப்படாத ஒரு சுவடியை எடுத்துக்கொண்டு, அந்தச் சுவடியைப் பதிப்பியல் நெறிப்படி, நெறிகளின் படி பதிப்பிக்கவேண்டும்.*
2. *மொழியியல், யாப்பியல் என்ற இருநோக்குகளில் சுவடியின் வரிவடிவ மொழியையும் மாணவர் செய்முறையில் பதிப்பித்த நூலின் வரிவ மொழியையும் ஒப்பிட்டு விளக்கவேண்டும்.*
3. *மாணவர் தன் செய்முறையில் ஏற்பட்ட பிழைகளைத் தொகுத்து, வகைப்படுத்தி விளக்கவேண்டும்.*
4. *6000 செறிவான சொற்களில் அறிக்கையை மாணவர் சமர்ப்பிக்கவேண்டும்.*

***Thiruvalluvar University, Vellore 632115***
***Diploma and Certificate Courses in Manuscriptology***
***with effect from the academic year 2020-21***
***Semester II. Project -2***

**ஆய்வுத் திட்டம்**

1. *பதிப்பிக்கப்படாத ஒரு சுவடியை எடுத்துக்கொண்டு அதை மாணவர் நவீனத் தமிழின் வரிவடிவங்களுக்கு மாற்றி எழுதி, கணனியில் பதிவு செய்து, ஆய்வு அறிக்கையுடன் அதைச் சமர்ப்பிக்கவேண்டும்.*
2. *பதிப்பிக்கப்பட்ட சுவடி ஆய்வு அறிக்கையில் பின்னிணைப்பு-2இல் தரப்படவேண்டும்.*
3. *ஆய்வு அறிக்கையின் இயல்கள் ஆய்வாளர் பதிப்பு அனுபவங்களையும் பதிப்பிக்கப் பின்பற்றிய நெறிமுறைகளையும் பற்றியதாக இருக்கவேண்டும்.*
4. *தாள்-1இல் குறிப்பிட்டபடி ஐந்து வகையான வரிவடிவ அடைவுகள் தயாரித்து மாணவர் பின்னிணைப்பு-1இல் தரவேண்டும். வரிவடிங்களின் முதன்மை வடிவம், மாற்று வடிவம், திரிபு வடிவம் முதலானவற்றின் அடைவுகள் இந்த அட்டவணைகளில் தரப்படவேண்டும்.*
5. *பின்னிணைப்பு-2இல் பதிப்பிக்கப்பட்ட சுவடியின் அச்சுவடிவம் தரப்படவேண்டும்.*
6. *ஆய்வறிக்கையின் இயல்கள் தாள்-4இல் குறிப்பிட்ட அலகுத் தலைப்புகள், மற்றும் உட்தலைப்புகளுடன் ஒத்துச் செல்லவேண்டும்.*
7. *ஆய்வுத் திட்டம் பதிப்பியல் வல்லுநர் ஒருவராலும் சுவடியின் உள்ளடக்கத்திற்குப் பொருத்தமான ஒரு அறிஞராலும் மதிப்பீடு செய்யப்படவேண்டும்.*